# தூத்துக்குடி மாவட்டத்தில் புதிதாக 600 மெகாவாட் அனல் மின் நிலையம்!

## அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பதிலுரை... 12 ஆம் பக்கத் தொடர்ச்சி

தமிழ்நாடு முழுவதும் மின்சாரம் சார்ந்த, மின் வாரியம் சார்ந்த புகார்கள் இருந்தால், மின்னகத்தினுடைய எண்ணிற்குத் தொடர்பு கொண்டு தெரிவித்தால், விரைந்து நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பாகும் என்று முதலமைச்சர் மின்னகத்தை உருவாக்கித் தந்திருக்கின்றார்கள்.

**வணிகதாரர்களுக்கு பணி நியமன ஆணைகள்!**

அதேபோன்று, மின் வாரியத்தில் பணியிலிருக்கும்போது இறந்தவர்களுடைய வாரிசுதாரர்களுக்கும், மருத்துவக் காரணங்களால் ஓய்வு பெற்ற பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்குவதைப் பொறுத்தவரையில், கடந்த காலங்களைப் போல் அல்லாமல், உடனுக்குடன் பணிகளை வழங்க வேண்டும் என்று உத்தரவுகளை முதலமைச்சர் வழங்கியிருக்கின்றார்கள். பொதுவாக, இறந்தவர்களுடைய வாரிசுதாரர்கள், 1 வருடம், 2 வருடங்கள் என காத்திருந்து, மனுக்களை எடுத்து வந்து மின் வாரியத்தினுடைய தலைமை அலுவலகத்திற்கும், முதலமைச்சர் அவர்களுடைய தனிப் பிரிவுக்கும் சென்று கொடுப்பதையெல்லாம் தவிர்க்க வேண்டும். உடனுக்குடன் அந்தந்த மாதங்களிலேயே குறிப்பாக வேலை உத்தரவுகளை வழங்க வேண்டும் என்று முதலமைச்சர் உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள். இதுவரை இந்த நான்கு ஆண்டுகளில் 2,692 வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி முதலமைச்சர் அவர்களுடைய திராவிட மாடல் அரசு புதிய வரலாற்றுச் சாதனையை உருவாக்கியிருக்கின்றது.

அதேபோன்று, தேரோடும் வீதிகளில் இருக்கக்கூடிய மேல்நிலை மின் கம்பி பாதைகளை புதைவடங்களாக மாற்ற வேண்டும் என்ற குறிப்பிடத்தக்க சில திருக்கோயில்களின் கோரிக்கைகளை ஏற்று, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுடைய கோரிக்கைளையெல்லாம் ஏற்று, அந்தப் பணிகளை செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில் குறிப்பாக 7 திருக்கோயில்கள் ரூ.11.85 கோடி மதிப்பிலான பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. 7 பணிகள் 9.29 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேபோல், 7 பணிகள் 21.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட வேண்டும். 23.61 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12 பணிகள் தற்போது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஒட்டுமொத்தமாக 33 பணிகள், 65.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டது தான் மின்சார வாரியத்தின் வரலாற்றில் 4 ஆண்டுகளில் அதிகமாக தேரோடும் வீதிகளில் மேல்நிலை கம்பிகளை புதைவிடங்களாக மாற்றுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட அதிகபட்ச பணிகளாகும். மீதமிருக்கிற பணிகளையும் விரைவாக முடித்திட வேண்டுமென்று துறைக்கு முதலமைச்சர் உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள்.

**சீரான மின் விநியோகத்திற்கு துறை நடவடிக்கை!**

அதேபோல், வட கிழக்கு பருவ மழை, மாண்டஸ் புயல், தென் மாவட்டங்களில் பெய்த வரலாறு காணாத மழை. இந்த தென் மாவட்டங்களில் பெய்த வரலாறு காணாத மழையில், மிகப் பெரிய பாதிப்புகள் உருவானது. அப்படி பாதிப்புகள் ஏற்பட்டபொழுதும் கூட, முதலமைச்சர் , துறையினுடைய உயர் அதிகாரிகள் உடனடியாக அங்கே சென்று பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று உத்தரவுகளை வழங்கினார்கள். எவ்வளவு பாதிப்புகள் ஏற்பட்டாலும், 5 நாட்களுக்குள் முழுமையாக அந்தப் பணிகளை முடித்து, சீரான மின் விநியோகத்திற்கு துறை நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதேபோல், பெஞ்சல் புயலைப் பொறுத்தவரை, ஒட்டுமொத்த துறையும் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில் அங்கே பணிகளை மேற்கொண்டபோதும்கூட, 3 நாட்களில் மின் வாரியத்தினுடைய பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு, சீரான மின் விநியோகத்திற்கான பணிகளை மேற்கொண்டோம். குறிப்பாக, அங்கேயிருக்கக் கூடிய சில பொது மக்களும், அங்கேயிருக்கக் கூடிய சில அதிகாரிகளும் எங்களிடத்தில் சொன்னது, பொதுவாக, மின் வாரியம்தான் கடைசியாக பணிகளை முடிப்பார்கள்; மற்ற துறைகளெல்லாம் முடித்துவிட்டு வெளியே சென்றுவிடுவார்கள். கடைசியாக தான் மின்

## தமிழ்நாடு மின்வாரியக் கட்டுப்பாட்டில் செயல்படும் மருந்தகங்கள் மேம்படுத்தப்படும்!

வாரியம் supply கொடுப்பார்கள். அப்படியிருந்த சூழலை மாற்றி, மற்ற துறைகளைவிட மின்சார வாரியம் முதல் ஆளாக பணிகளை முடித்து, முழுமையான மின் விநியோகத்தை கொடுத்து, களத்திலிருந்து வெளியேறியிருக்கிறார்கள் என்ற பாராட்டுகளை முதலமைச்சர் அவர்களிடத்தில் சொல்லுங்கள் என்று எங்களிடத்தில் தெரிவித்தார்கள். அங்கேயே தங்கியிருந்து துறையினுடைய அதிகாரிகளெல்லாம் சிறப்பாகப் பணிகளை மேற்கொண்டார்கள். இந்தச் சட்டமன்றப் பேரவையின் வாயிலாக மழை-வெயில், இரவு-பகல் பாராமல், தங்களுடைய குடும்பங்களை விட்டு, களத்தில் நின்று, ஒரு சிறு பகுதியில் இரவு 12 மணிக்கு மின் தடை ஏற்படுகிறது என்று சொன்னாலும்கூட உடனுக்குடன் சென்று பணிகளை மேற்கொள்ளக்கூடிய எங்களுடைய மின் வாரியத்தினுடைய உயர் அதிகாரிகள் தொடங்கி, கடைநிலை ஊழியர்கள் வரை அனைவருக்கும் என் சார்பாக அன்பு கலந்த நன்றியை இந்தப் பேரவையின் வாயிலாக இப்போது நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மின் வாரியத்தின் ஊழியர்களோடு சேர்ந்து பணியாற்றக்கூடிய தொழிற்சங்கத்தைச் சார்ந்திருக்கக்கூடிய நிர்வாக பெருமக்கள், LPF சங்கம் உள்ளிட்ட அனைத்து சங்கத்தினுடைய நிர்வாக பெருமக்களுக்கும் துறையின் சார்பாக என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**புதிய அலுவலகங்கள்!**

2024-25 ஆம் ஆண்டினுடைய ஒருங்கிணைந்த மின் பராமரிப்பு திட்டம், 16-10-2024 முதல் 31-3-2025 வரை மொத்தம் 19,45,769 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, சரி செய்யப்பட்டிருக்கின்றன. 3 புதிய மண்டல அலுவலகங்கள், ஒரு புதிய மின் பகிர்மான வட்ட அலுவலகம், 11 புதிய கோட்டங்கள் என முழுவதுமாக புதிய அலுவலகங்களை முதலமைச்சர் தொடங்கி வைத்து, தற்போது பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. அதேபோல் அனல் மின் நிலையங்களினுடைய சாம்பல் விற்பனை வருவாய் என்பது உச்சத்தை அடைந்திருக்கிறது. ஒரு துறையினுடைய வளர்ச்சி என்பது, முதலமைச்சர் உன்னிப்பாகக் கவனித்து, எந்தெந்த வகையில் மின்சார வாரியத்தின் செலவுகளை குறைக்க முடியும்; எந்தெந்த வகையில் வருவாயைப் பெருக்க முடியும் என்பதை கவனித்து, அதற்கான ஆலோசனைகளையும், உத்தரவுகளையும் வழங்கியிருக்கிறார்கள். தமிழ்நாடு மின்சார வாரியத்தின் உலர் சாம்பல் விற்பனை என்பது கடந்த காலங்களில் குறிப்பாக, 2016-17-ல் ரூ.91 கோடி; 2017-18-ல் ரூ.84 கோடி; 2018-19-ல் ரூ.93 கோடி; 2019-20-ல் ரூ.92 கோடி; 2020-21-ல் ரூ.92 கோடி; 2011-16-ல் ரூ.113 கோடியாக இருந்தது. அதன்பிறகு 5 ஆண்டுகளில் ரூ.92 கோடியாக மாறிவிட்டது. முதலமைச்சர் எடுத்த சீரிய நடவடிக்கைகளின் காரணமாக, வெளிப்படை தன்மையோடு அதற்கான ஒப்பந்தப்புள்ளிகளெல்லாம் கோரப்பட்டு, 2021-22-ல் ரூ.122 கோடி, 2022-23-ல் ரூ.191 கோடி, ஒரு ஆண்டினுடைய வருவாய். 2023-24-ல் ரூ.218 கோடி, 2024-25-ல் ரூ.241 கோடி; இந்த 4 ஆண்டுகளில் மட்டும் சாம்பல் விற்பனையின் மூலமாக 773 கோடி ரூபாயை மின்சார வாரியம் வருவாயை ஈட்டியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல், மின் விநியோகம், மின்சார கொள்முதல், மின்சாரத்தினுடைய உற்பத்தி, நாம் விநியோகிக்கக்கூடிய மின்சாரத்திற்கான price. Bill இவையெல்லாம் சேர்த்து, மின் திருட்டு என்பது ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கின்றன. அதனை தீவிரமாக கண்காணிக்க வேண்டும். நம்முடைய இழப்புகளை தடுக்க வேண்டுமென்கிற சீரிய நோக்கத்தோடு, இந்த 4 ஆண்டுகளில் குறிப்பாக 63,394 மின் திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு, ஏறத்தாழ 294 கோடி ரூபாய் அபராதமாக திருட்டில் ஈடுபட்டவர்களிடமிருந்து மின்சார வாரியம் வசூலித்திருக்கிறது. இது சீரிய நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பொதுவாக, மின்சாரத் துறையைப் பொறுத்தவரை, நம்முடைய கொள்முதலுக்கான விலைக்கும், நாம் விநியோகிக்கின்ற விலைக்கும் மாறுபாடு இருக்கிறது.

**தமிழ்நாட்டில் மின் கட்டணம் குறைவு!**

அதில் இடையில் இருக்கக்கூடிய தேவைகளை, குறிப்பாக ஒட்டுமொத்தமாக 2021-க்கு பிறகு தமிழ்நாடு மின்சார வாரியம் என்ற ஒரு அமைப்பு இயங்குகிறது, செயல்படுகிறது என்று சொன்னால் அது திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் முதலமைச்சரின் கருணையால் தமிழ்நாடு மின்சார வாரியம் இப்பொழுது செயல்பட்டு கொண்டிருக்கின்றன. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அரசு தொடர்ந்து அதற்கான நிதிகளையும், மானியங்களையும் தொடர்ந்து வழங்கி கொண்டிருக்கிறது. குறிப்பாக 2021-2025 ஆம் ஆண்டு மின் கட்டண மானியமாக 51,694

## வழுதூர் எரிவாயு மின் நிலையத்தில் ரூ. 111 கோடி மதிப்பில் மேம்பாட்டுப் பணிகள்!

கோடி ரூபாயை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கியிருக்கின்றார்கள். நிதியுதவி மானியமாக 57,190 கோடி ரூபாய், கடந்த ஆண்டுகளில் மொத்தமாக ஒரு இலட்சத்து 8 ஆயிரத்து 885 கோடி ரூபாய் அரசு நிதியை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கொடுத்து, மின்சார வாரியத்தை காப்பாற்றி மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாட்டில் மின்கட்டணம் குறைவு என்ற நிலையிலே சீரான மின்விநியோகத்திற்கான புதிய திட்டங்கள், அதேபோல உட்கட்டமைப்பு வசதிகள், புதிய வளர்ச்சித் திட்டங்கள் என அனைத்தையும் ஒருசேர முதலமைச்சர் முன்னெடுத்திருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே பேரவைக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல சேமிப்பை பொறுத்தவரை 2021-2022 ஆம் ஆண்டில் தற்போதுள்ள மின்நிலையங்களினுடைய திறமையான செயல்பாடு, வட்டிவீதம் குறைப்பு உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளால் 2,745 கோடி ரூபாய் சேமிப்பை உருவாக்கியிருக்கிறது மின்சார வாரியம். 2022-2023 ஆம் ஆண்டில் அனல்மின் நிலையங்களின் இயக்கம், பராமரிப்பு செலவுகளை குறைத்தல், நிலக்கரி கையாளுதல், கட்டண சேமிப்பு உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக 1,090 கோடி ரூபாய் அளவிற்கு சேமிப்பை தமிழ்நாடு மின்சார வாரியம் உருவாக்கியிருக்கின்றன. இது ஒருபக்கம் சென்றாலும்கூட தமிழ்நாடு மின்சார வாரியத்தை புதிய வளர்ச்சிக்கேற்ப தகவல்தொழில்நுட்பத் துறையில் அதை மேம்படுத்திட வேண்டுமென்று பல்வேறு ஆலோசனைகளை முதலமைச்சர் வழங்கி, அதற்கான பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு முதற்கட்டமாக மின் இணைப்புடன் ஆதார் எண்ணை இணைக்கக்கூடிய பணிகள் குறுகிய காலத்தில் முழுமையாக முடிக்கப்பட்டு செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அதேபோல திட்டமிட்ட மின்விநியோக தடைகள் பற்றிய SMS இப்படி நிறைய வளர்ச்சித் திட்டப் பணிகள் தகவல் தொழில்நுட்பத் துறையின் மூலமாக மின்சார வாரியத்திலே மேம்படுத்தப்பட்டு, அவை முழுமையாக இப்பொழுது நாம் செயல்பாட்டிற்கு கொண்டு வந்திருக்கின்றோம். மின்கட்டண திருத்தத்திலிருந்து மின் நுகர்வோர்களுக்கு பல்வேறு சலுகைகளை முதலமைச்சர் வழங்கியிருக்கின்றார்கள். குறிப்பாக, வீட்டு மின்நுகர்வோர்கள் செலுத்திவந்த நிலைக்கட்டணம், fixed charge முழுமையாக ரத்து செய்யப்பட்டு, இது தேர்தல் வாக்குறுதியில் கொடுக்கப்பட்ட ஒரு வாக்குறுதி. அதை நிறைவேற்றக்கூடிய வகையில் முதலமைச்சர் அந்த நிலைக்கட்டணத்தை முழுமையாக ரத்து செய்திருக்கின்றார்கள்.

**நெசவாளர்களுக்கு மானியம்!**

அதேபோல கைத்தறி நெசவாளர்களுக்கு 200 unit என்பதை 300 unit ஆக உயர்த்தி, முதலமைச்சர் வழங்கி அதற்கான அரசு நிதியை மானியமாக வழங்கியிருக்கின்றார்கள். விசைத்தறி நெசவாளர்களுக்கு தேர்தல் வாக்குறுதியிலே கொடுக்கப்பட்டதுபோல 750 unit என்பதை 1,000 unit ஆக உயர்த்தி, அது இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டு ஏறத்தாழ 1,26,000 நெசவாளர்கள் zero கட்டணம், 1,26,000 பேருக்கு கட்டணமே கிடையாது. bill-லே கட்டுவதில்லை. Zero என்ற நிலையில் விசைத்தறி நெசவாளர்கள் பயன்பெற்று வருகின்றார்கள். 571 கோடி ரூபாய் விசைத்தறி நெசவாளர்களுக்கு மட்டும் அரசு மானியமாக முதலமைச்சர் வழங்கியிருக்கின்றார்கள். இப்படி தொடர்ச்சியாக இரு மாதங்களில் 1,000 unit-க்கு மேல் உபயோகிக்கும் விசைத்தறி நெசவாளர்களுக்கு நிலைக்கட்டணம் செலுத்துவதில் 50 சதவிகிதம் விலக்கு அளிக்கப்படுகிறது. இப்படி தொடர்ச்சியாக பல்வேறு சலுகைகளையும், அதற்கான முன்னெடுப்புகளையும் முதலமைச்சர் வழங்கி, இன்று மின்சார வாரியத்தை காப்பாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

அதோடு சேர்ந்து, இறுதியாக விருதுகள், ஒரு துறை எப்படி செயல்படுகிறது, அதனுடைய செயலாக்கம் எந்தளவிற்கு இருக்கிறது என்பதை நாம் இறுதியிலே எடை போடுகின்றபோது, அந்தத் துறையினுடைய விருதுகளை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். எல்லோருக்கும் எல்லாம் என்ற உன்னத நோக்கத்தோடு நல்லாட்சி நடத்துகின்ற முதலமைச்சருடைய திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் 2021 ஆம் ஆண்டு முதல் கடந்த நான்காண்டுகளில் இரண்டு SKOCH விருதுகள் உட்பட தேசிய அளவிலான 12 விருதுகளை பெற்று வரலாற்று சாதனையை படைத்திருக்கின்றன. நிறுவன வளத் திட்டமிடல், காற்றாலை மின் உற்பத்தி, தானியங்கி மின் அளவுகள் பொருத்தி செயல்படுத்தியமைக்காக மற்றும் நிலக்கரி கையாளுதலுக்காக பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு இந்தப் பேரவைக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். உறுப்பினர் பேசுகின்றபோது, கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய தொகுதியிலே அதிகாரிகளை தொடர்புகொள்வதற்கு சிரமமாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஒரு கணம் அவர் யோசித்து பார்க்க வேண்டும். 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் Nodal Officer என்ற ஒருவரை தமிழ்நாடு மின்சார வாரியத்தின்மூலமாக நியமிக்கப்பட்டு, ஒரு தொகுதியில் பல section இருக்கலாம். பல AE இருக்கலாம், பல AD இருக்கலாம், பல EE இருக்கலாம். இருந்தாலும் ஒவ்வொருவருக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களை அழைத்து அந்த பணிகளை சொல்ல வேண்டாம். ஒரேயொரு point ஆக இருந்து Nodal Officer-ஐ நியமித்து அவரிடத்திலே பேசினால் அந்தத் தொகுதியினுடைய முழு பிரச்சினைகளை தீர்க்க முடியுமென்ற அடிப்படையில், ஒரு சிறப்புத் திட்டமாக, சிறப்பு நேர்வாக முதலமைச்சர் 234 தொகுதிகளுக்கும் ஒரு Nodal Officer-ஐ நியமித்திருக்கின்றார். அவரும் அந்த Nodal Officer-ஐ சந்தித்திருக்கின்றார். சந்தித்த photo-வும் இப்பொழுது அச்சடிக்கப்பட்டு, சட்டமன்றத்தில் மேசையிலே வைக்கப்பட்ட அந்த புத்தகத்தில் அவருடைய புகைப்படமும் இடம் பெற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**அறிவிப்புகள்**

**எரிசக்தித் துறை**

1) **புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்குதல்**

தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தால் இந்த ஆண்டில் 50,000 புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2) **காலியாக உள்ள பணியிடங்கள் நிரப்புதல்**

இங்கே பேசிய கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் , இந்தந்த இடங்களில் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்று சொன்னார்கள்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இருக்கக் கூடிய காலிப் பணியிடங்கள் தேவைக் கேற்ப நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

TNEB Ltd.-ல் காலியாக உள்ள பணியிடங்கள் தேவைக்கேற்ப நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

3) **புதிய அனல் மின் நிலையம் நிறுவுதல்**

தூத்துக்குடி மாவட்டத்தில் புதிதாக 600 மெகா வாட் அனல் மின் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

4) **தேரோடும் வீதிகளில் மேல்நிலை மின் பாதைகளை புதைவடங்களாக மாற்றுதல்**

ரூ.57 கோடி மதிப்பீட்டில், மன்னார்குடி, மலைக்கோட்டை, சிதம்பரம், திருஉத்திரக்கோசமங்கை, திருவிடந்தை, சமயபுரம், மேல்மலையனூர், திருவிடைமருதூர், காளையார்கோவில் ஆகிய ஊர்களில் அமைந்துள்ள தேரோடும் வீதிகள் மற்றும் திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் செல்லும் மேல்நிலை மின் பாதைகள் புதைவடங்களாக மாற்றி அமைக்கப்படும்.

5) **கடலோர நகரங்களில் மேல்நிலை மின் பாதைகளை புதைவடங்களாக மாற்றுதல்**

ரூ.490 கோடி மதிப்பீட்டில் இயற்கை பேரிடர்களால் இன்னலுக்கு உட்படும் கடலோர நகரங்களான கடலூர் மற்றும் நாகப்பட்டினத்தில் மேல்நிலை மின் பாதைகள் புதைவடங்களாக மாற்றி அமைக்கப்படும்.

6) **TNEB Ltd.-ல் இயங்கும் மருந்தகங்கள் மேம்படுத்துதல்**

TNEB Ltd. கட்டுப்பாட்டில் செயல்படும் பல்வேறு மின் கழகங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர்கள் பயன்பெறும் வகையில், தற்பொழுது இயக்கத்தில் உள்ள மருந்தகங்கள் மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7) **தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தில் புதிய துணை மின் நிலையங்கள் நிறுவுதல்**

ரூ.215 கோடி மதிப்பீட்டில் 18 புதிய 33/11 கி.வோ. துணை மின் நிலையங்கள் நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும்.

8) **தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தில் உள்ள துணை மின் நிலையங்களில் மின்மாற்றிகளின் திறன் மேம்படுத்துதல்**

ரூ.55 கோடி மதிப்பீட்டில், 26 துணை மின் நிலையங்களில் (33/11 கி.வோ.) தற்போதுள்ள மின்மாற்றிகளின் திறன் மேம்படுத்தப்படும்.

9) **தமிழ்நாடு மின் உற்பத்திக் கழகத்தின் மின் உற்பத்தி நிலையங்களில் மூலதனப் பணிகள் மேற்கொள்ளுதல். ரூ.500 கோடி மதிப்பீட்டில் இதற்கான பணிகளை நாம் மேற்கொள்ள இருக்கிறோம்.**

ரூ.500 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி அனல் மின் நிலையம், மேட்டூர் அனல் மின் நிலையம்-I, மேட்டூர் அனல் மின் நிலையம்-II, வட சென்னை அனல் மின் நிலையம்-I மற்றும் வட சென்னை அனல் மின் நிலையம்-II ஆகியவற்றில் உள்ள பல்வேறு உபகரணங்களில் மூலதனப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

10) **தமிழ்நாடு மின் உற்பத்திக் கழகத்தின் வழுதூர் எரிவாயு மின் நிலையம்-I-ல் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல்**

ரூ.111 கோடி மதிப்பீட்டில் வழுதூர் எரிவாயு மின் நிலையம்-I

(95 மெகா வாட்) சுழலியின் வெப்ப எரிவாயு பாதை ஆய்வு மற்றும் உலர்ந்த நைட்ரஜன் ஆக்சைடு (DLN) கட்டுப்படுத்தும் அமைப்பின்மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும்.

11) **தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகத்தின் காடம்பாறை நீரேற்று புனல் மின் நிலையத்தின் எஞ்சிய ஆயுள் மதிப்பீட்டு ஆய்வுப் பணி மேற்கொள்ளுதல்**

காடம்பாறை (4x100 மெகா வாட்) நீரேற்று புனல் மின் நிலையத்தை புதுப்பித்து நவீனப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய, எஞ்சிய ஆயுள் மதிப்பீட்டு ஆய்வுப் பணி மேற்கொள்ளப்படும்.

12) **தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தில் புதிய துணை மின் நிலையங்கள் அமைத்தல்**

ரூ.1,192 கோடி மதிப்பீட்டில், ஒரு புதிய 400 கி.வோ. துணை மின் நிலையம் மற்றும் 11 புதிய 110 கி.வோ. துணை மின் நிலையங்கள் நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும்.

13) **தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் துணை மின் நிலையங்களில் மின் மாற்றிகளின் திறன் மேம்படுத்துதல்**

ரூ.94 கோடி மதிப்பீட்டில், 25 துணை மின் நிலையங்களில் (110 கி.வோ.) தற்போதுள்ள மின்மாற்றிகளின் திறன் மேம்படுத்தப்படும்.

14) **சிறப்பு பாதுகாப்பு பயிற்சிகள் வழங்குதல்**

TNEB Ltd.-ல் பணிபுரியும் அனைத்து களப் பணியாளர்களுக்கும் பணியாளர்களின் பாதுகாப்பிற்காக பயிற்சி மையங்கள்மூலம் பணியிடத்தில் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படும்.

15) **தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தில் ஒரு சிறப்பு தரவு பகுப்பாய்வு பிரிவு உருவாக்குதல்**

திறன்மிகு மின் கட்டமைப்பு செயல்பாட்டிற்கான ஒருங்கிணைந்த மேலாண்மை தகவல் அமைப்பு (MIS) மேம்பாடு மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான தரவு பகுப்பாய்வுகளை மேற்கொள்ள தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் (TNPDCL), ஒரு சிறப்பு தரவுப் பகுப்பாய்வு பிரிவை உருவாக்கும்.

இவ்வாறு அமைச்சர் வி. செந்தில் பாலாஜி அறிவித்துள்ளார்.

# ‘டாஸ்மாக்’ பணியாளர்களுக்கு ரூ. 2 ஆயிரம் ஊதிய உயர்வு!

## சட்டப் பேரவையில் – உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் – அமைச்சர் வி. செந்தில் பாலாஜி அறிவிப்பு!

**சென்னை, ஏப்.24-**

**சட்டப் பேரவையில், நேற்று முன்தினம் - உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆகிய மானிய கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு பதிலளித்து அமைச்சர் வி. செந்தில் பாலாஜி குறிப்பிட்டதாவது:**

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையினுடைய நிர்வாகக் கட்டுப்பாட்டில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம், அமலாக்கப் பணியகம், குற்றப்புலனாய்வுத் துறை, தமிழ்நாடு வாணிபக் கழகம் ஆகியவை செயல்படுகின்றன. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம் கள்ளச் சாராயம் காய்ச்சுதல் மற்றும் விற்பனையை ஒழித்தல், மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல், மதுபான உற்பத்தி நிலையங்களினுடைய மதுபான உற்பத்தியை கண்காணித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றன. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பிற்கிணங்க மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவு, குற்றப்புலனாய்வு பிரிவுடன் இணைக்கப்பட்டு அமலாக்க பணியகம் குற்றப்புலனாய்வுத் துறை என்ற ஒரு புதிய பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இப்பிரிவின் நோக்கம் சட்டவிரோதமாக மதுபானம் காய்ச்சுதல், கடத்தல் மற்றும் மதுபானம் வைத்திருத்தல், விற்பனையை தடை செய்தல், கள்ளச் சாராயம் கடத்தலை தடுத்தல், பிற மாநிலங்களிலிருந்து வரி செலுத்தப்படாத இந்திய தயாரிப்பு வெளிநாட்டு மதுபானங்களை தமிழ்நாட்டிற்குள் கடத்துவதை தடுப்பது என சட்டவிரோதமாக போதைப்பொருள் விற்பனை கடத்தலை தடுப்பதாகும்.

மது மற்றும் போதைப்பொருட்களினுடைய தீமைகள் குறித்து பொதுமக்கள், மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 9,531 பேரணிகள், 5,675 தெரு நாடகங்கள், 4,500 நாடகங்கள், 6,47,426 துண்டு பிரசுரங்கள் விநியோகம் செய்யப்பட்டு, 30,55,939 நபர்கள் பங்கேற்றுள்ளனர். 2024 ஆம் ஆண்டில் 7,691 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 7,486 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். 2,30,230 லிட்டர் கள்ளச் சாராயம் அழிக்கப்பட்டுள்ளன. 2025 ஆம் ஆண்டில் 952 கள்ளச் சாராய வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1,042 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதை இந்தப் பேரவைக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில், போதைப்பொருளுக்கெதிரான நடவடிக்கைகள் பற்றிய முதல் பிரத்யேக மாநாடு நடைபெற்றது. மாநிலம் முழுவதும் மாணவர்களால் தெரு போதைப்



பொருள் எதிர்ப்பு உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டன. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் 80 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய முன்னிலையில் உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் பேரில், போதைப்பொருள் இல்லாத தமிழ்நாட்டிற்கான இலக்காக மேலாண்மை அலகு உருவாக்கப்பட்டுள்ளது. கள்ளச் சாராய இறப்புகளைத் தவிர்க்க, தொடர்ச்சியான தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அனைத்து வார இறுதி நாட்களிலும், முக்கிய பண்டிகை காலங்களிலும் கள்ளச் சாராயம் காய்ச்சும் வாய்ப்புள்ள மாவட்டங்களில் தீவிர சோதனைகள் நடத்தப்பட்டு, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். சாராய கடத்தல் வழக்குகளில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை உள்ளிட்ட கடுமையான தண்டனைகளை வழங்குவதற்கான சட்டத்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இப்படி தொடர்ச்சியாக துறையின் சார்பாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதோடு தொடர்ந்து, தமிழ்நாடு காவல் துறையின் தீவிர முயற்சியால் கஞ்சா சாகுபடி முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு, பூஜ்ஜிய சாகுபடி மாநிலமாக தமிழ்நாடு இருந்து வருகிறது.

**போதைப் பொருள் விற்பனை குழுக்கள் மீது நடவடிக்கை!**

கடந்த 2024 ஆம் ஆண்டில் 11,025 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 17,903 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, சுமார் 21,588 கிலோ கஞ்சா, 4,357 கிலோ heroin பறிமுதல் செய்யப்பட்டு, மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, 144 நபர்கள் குண்டர் சட்டத்திலும், தடுப்புக் காவல் சட்டத்திலும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே, மாநிலங்களுக்கிடையேயான போதைப்பொருள் விற்பனை கடத்தலில் ஈடுபட்டு வந்த தனிநபர்கள் மற்றும் குழுக்களின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. முறையான மருத்துவச் சீட்டு இல்லாமல், சிறார்களுக்கும், மற்றவர்களுக்கும் மருந்து சீட்டு மருந்துகளை சட்ட விரோதமாக விற்பனைச் செய்வதை கட்டுப்படுத்திட, கூட்டு சோதனைகள்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தொடர்ச்சியாக பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் அருகே கஞ்சா விற்பனையை முற்றிலுமாக ஒழிக்க சிறப்பு அதிரடி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பள்ளி, கல்லூரிகளில் இளைஞர்கள் குறிப்பாக மாணவர்களிடையே போதைப்பொருள் புழக்கம் தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

தமிழ்நாடு வாணிபக் கழகத்தில் மேற்பார்வையாளர்கள், விற்பனையாளர்கள், உதவி விற்பனையாளர்கள் என மொத்தம் 23,629 பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில், 500 சில்லறை விற்பனை கடைகள் மூடப்பட்டு, கடைகளினுடைய எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு வாணிபக் கழகத்தினுடைய அனைத்து செயல்பாடுகளும் முழுமையாக கணினிமயமாக்கும் ஒரு புதுமைத் திட்டம் 28 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இது குறிப்பாக, உற்பத்திச் செய்யக்கூடிய இடங்களில் தொடங்கி, கடைசியாக விநியோகம் செய்யக்கூடிய பணிகள் வரை, முழுமையாக end-to-end இதைக் கண்காணிக்கக்கூடிய ஒரு முயற்சியாக இந்த ஒரு புதுமைத் திட்டத்தை தமிழ்நாடு வாணிபக் கழகம் முன்னெடுத்திருக்கிறது. இது முழுமையாக துறையினுடைய கட்டுப்பாட்டில் அலுவலகத்திலிருந்தே கண்காணிக்கக்கூடிய அளவிற்கு இந்தத் திட்டத்தை முன்னெடுத்து 28 மாவட்டங்களில் இப்போது முழுமையாக அவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

எனவே, தமிழ்நாடு வாணிபக் கழகம் நம்முடைய நடவடிக்கையின் காரணமாக, குறிப்பாக இன்று சட்டமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்புகளைக் கேட்டு வெளியிலே சென்று சில கருத்துகளை எதிர்க்கட்சித் தலைவர் முன் வைத்திருக்கின்றார்கள். சில கருத்துகளை முன்வைக்கின்றபோது, கடந்த காலங்களில் ஆட்சியில் நடைபெற்றதை

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்